# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

# ஆண்டறிக்கை

# 2012

NIOSH

National Institute of Occupational Safety and Health • Sri Lanka

## பொருளடக்கம்

### பகுதி 01

பக்கம்

- ❖ தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் தொலைநோக்கு - செயற்பணி 1
- ❖ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத் தவிசாளரது செய்தி 2
- ❖ தொழில், தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளர் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத் தவிசாளரின் செய்தி 3
- ❖ தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகப் பணிப்பாளர் அதிபதியின் செய்தி 4


### பகுதி 02

**2012 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற இலக்குகளும், முன்னேற்றங்களும்** 5

முன்னேற்றம் 6

- ❖ பாதுகாப்பு அலுவலர்களின் பயிற்சி
  - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திலட தேசிய டிப்புளோமா பாடநெறி 6
  - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் பாடநெறிகள் 6
  - பெருந்தோட்டத் துறைக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் பாடநெறி 7
- ❖ வேலைக் களங்களை ஆய்வுசெய்வதன் மூலம் சூழல்சார் அளவீட்டு சேவைகளை வழங்குதல் 8
- ❖ உயர்தொழில்சார் சுகாதாரம் தொடர்பான பௌதீக அளவீடுகளை வழங்குதல் (நிறுவகங்களுக்கான மருத்துவ பரிசோதனைகளை வழங்குதல்) 8
- ❖ தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனங்களுக்கான அறிவினை வழங்குதல் 9


### பகுதி 03

**2012 ஆம் ஆண்டில் விசேட செயற்பாடுகள்**

- ❖ தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் மக்களிடையேயும், வாழ்க்கைத்தொழில் பயிலுநர்களிடையே விழிப்புணர்வினை உருவாக்குதல் மற்றும் சுகாதார கிளினிக்குகளை நடத்துதல் - 01 10
- ❖ பொது மக்கள் மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்றுவிப்பாளர்களிடையே தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்ட ங்களை நடத்துதல் 11
- ❖ இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்து வதற்காக முத்தரப்பு விநியோக பயிற்சிப்பட்டறையை நடத்துதல் 12

- ❖ சர்வதேச தொழில் தாபனத்தால் நிதியிடப்பட்ட ''கிறீன் ஜோப்ஸ்'' என்பது பற்றிய அறிவினை பரிமாற்றிக்கொள்வதற்காக பயிற்சிப்பட்டறையொன்றை நடத்துதல் 12
- ❖ தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் வாழ்க்கைத்தொழில் பயிற்சி உசாவலர்களுக்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் 02 மூன்று நாள் பயிற்சிப்பட்டறையை நடத்துதல். 13
- ❖ ''தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தினூடாக பசுமையான உலகத்தை நோக்கி'' என்ற கருப்பொருளின் கீழ் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தினை நடத்தியமை 14
  - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்திற்காக 2012 ஒக்டோபர் 05 ஆம் திகதி ஊடக மாநாடொன்றை நடத்தியமை 14
  - 'வின்லேஸ்' வேலைக் களங்களில் சுகாதார நிலைமை தொடர்பில் பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறையை நடத்தியமை 15
  - ICTAD இன் ஒருங்கிசைவுடன் நிருமாணத் துறையின் பணியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறையை நடத்தியமை 15
  - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தின் பிரதான மாநாடு 16
  - பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தை நடத்தியமை 17
- ❖ கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவ கருத்திட்டம் 18
- ❖ தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்விற்கான நூலகம் 19


## பகுதி 04


- ❖ தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர்கள் சபை 20
- ❖ நிதிப் பகுப்பாய்வு 2011-2012 21
- ❖ முடிவுற்ற ஐந்தொகை 22
- ❖ முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று 23
- ❖ நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 24
- ❖ கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 2012 26

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தொழில், தொழில் உறவுகள் அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள தனி நிறுவகமாக 2005 ஏப்பிரல் 28 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்தது. எமது நிறுவகமானது, சிறந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் தொழில்சார் விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களைத் தடுப்பதனூடாக சரியான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் செயல்முறையியல் களை அவதானிப்பதனூடாக சிறந்த வேலைச் சூழலை ஒவ்வொருவருக்கும் வழங்குவதற்காக தன்னை அர்ப்பணித்துள்ளது.

எமது நிறுவகமானது, பணியாளர்கள், தொழில்தருநர்கள் மற்றும் அத்தகைய பயிற்சியினூடாக நான்மைகளைப் பெறக்கூடிய எந்தவொரு ஆளுக்கும் தேவையான கல்வி மற்றும் பயிற்சியை வழங்குகின்றது.

## தொலைநோக்கு

அனைவருக்கும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரியை வழங்குதல்.

## செயற்பணி

உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்குடன் வேலைத்தலத்தில் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரத்தை உத்தரவாதப்படுத்துவதனை முன்னெடுத்து கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினூடாக முத்தரப்பு அக்கறைதாரர்களை வலுப்படுத்துதல் மற்றும் அனைத்து வகையான தொழில் தீமைகளையும் தடுத்தல்.

**தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத் தவிசாளரது செய்தி**



எனது அமைச்சின் கீழ் வருகின்ற தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் முன்னேற்றம் மற்றும் அதனால் இலங்கையில் பணியாளர் மற்றும் தொழில்தருநர் ஆகிய இருவரையும் நோக்கி ஆற்றப்படுகின்ற சேவைகளை விபரிக்கின்ற, குழுநிலை விவாதத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற இந்த அறிக்கைக்கு தொழில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராக செய்தியொன்றை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த நிறுவகம், அரச மற்றும் தனியார் துறை சிறிய கைத்தொழில்களுக்கு அவற்றின் தரம் மற்றும் உற்பத்தித் திறனை செம்மைப்படுத்துவதற்காக மதிப்பிடமுடியாத சேவைகளை ஆற்றுகின்றது.இதன் மூலம் எனது பிரதான குறிக்கோள், பணியாளர்களின் தொழிலின் தன்மை, அவர்களது வேலைத்தலத்தின் சூழலிலிருந்து எழக்கூடிய உடல் நோய்களிலிருந்து விலகி அவர்களது தொழில் தரத்தைச் செம்மைப்படுத்துவதன் மூலம் பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்களிடையேயான பலமான உறவுடன் ஆரோக்கியமான ஊழியர் படையை உருவாக்குவதாகும்.

எனது இரண்டாவது குறிக்கோள், பொருளாதார அபிவிருத்தியை கொண்டுவருவதற்காக ஆரோக்கியமான ஊழியர் படை பங்களிப்புச் செய்வதற்கு அவசியமானவற்றை உணர்ந்து அதன் குறிக்கோள்களை அடைவதில் சரியான பாதையில் எனது அமைச்சின் கீழ் வருகின்ற தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தை வழிநடத்துவதாகும்.

''மஹிந்த சிந்தனை – எதிர்கால தொலைநோக்கு'' என்பதன் குறிக்கோளை நிறைவேற்றி, தொழில் நியமங்கள் மற்றும் சட்டங்களின் மீளாய்விற்கு பயனுறுதியளிப்பதனூடாக சமூக அந்தஸ்து மற்றும் ஊழியர் படையின் காப்பினைப் பாதுகாப்பதன் வழி வகைகளை விரிவுபடுத்துவதற்காக நான் எடுத்துக்கொண்ட உறுதிமொழியை உணர்ந்தும், அதனூடாக உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த நிறுவகத்தினால் ஆற்றப்பட்ட பணி இலக்குகள், தொழில்சார் சுகாதாரத்தைப் பாதுகாப் பதனை நோக்காகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், சூழலிலிருக்கின்ற இடர்கள் மற்றும் ஆபத்துக்களை அவதானிப்பதன் மூலம் பணியாளர்களுக்கு பொருத்தமான வேலைச் சூழலை உருவாக்குவதன் மூலம் சர்வதேச நியமங்களுக்கு இடமளித்து தேவையான சூழல்சார் அளவீட்டினைப் பெறுதல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

இந்த அனைத்து முயற்சிகளையும் நிறைவேற்றுவதில் குழும உணர்வுடன் ஈடுபட்டிருந்த அமைச்சினதும், நிறுவகத்தினதும் பதவியணியினருக்கு எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இந்த முயற்சியில் தமது முழுமையான ஒத்துழைப்பினை, பலத்தினை வழங்கியிருந்த அரச நிறுவனங்கள், சர்வதேச தொழில் தாபனம், அரச சார்பற்ற நிறுவனங்கள், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் சரியான வழிகாட்டலுக்காக அவரிற்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

காமினி லொகுகே
**தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்**

**தொழில், தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளர் மற்றும்**
**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத் தவிசாளரின் செய்தி**



இந்த அமைச்சினாலும், இதன் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களினாலும் 2012 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற முன்னேற்றம் தொடர்பில் 2013 ஆம் ஆண்டு தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சினாலும், அதன் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவகங்களினாலும் பொருளாதார அபிவிருத்திக்கும், அனைத்து சமூகங்களுக்கும் சிறந்த பங்களிப்பை வழங்குகின்ற உழைக்கும் மக்களுக்காக கடந்த ஆண்டு காலப்பகுதியில் சேவை ஆற்றப்பட்டிருந்தது.

இவற்றிற்குள், தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் மிகவும் குறுகிய காலப்பகுதியில் அடையப்பெற்ற பௌதீக முன்னேற்றங்கள், அதேபோன்று நிதி முன்னேற்றங்கள் சிறப்பானவை. இந்த நிறுவகமானது, ஆரோக்கியமான ஊழியர் படை மற்றும் நிறுவகத்தின் சிறந்த வேலைச் சூழலை உருவாக்கும் நோக்கில் ஈடுபாட்டுடன் செயலாற்றியுள்ளது.

அனைத்து வகையான தொழில்சார் விபத்துக்களையும் தடுப்பது தொடர்பில் கல்வி, பயிற்சி மற்றும் விழிப்புணர்வினை உருவாக்குவதனூடாக புதியதொரு தொழில்சார் பாதுகாப்பு ஆசாரத்தை உருவாக்குவதுடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஆற்றப்பட்ட வேலை அளப்பரியது. இந்த அனைத்து செயற்பாடுகளினூடாக நாட்டில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த குறிக்கோளினை அடைவதற்குத் தேவையான தலைமைத்துவம், உரிய வழகாட்டல் மற்றும் தலைமையை வழங்கியுள்ள தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த வெற்றியை அடைவதற்கு அர்ப்பணிப்புடன், கூட்டுறவுடன் செயலாற்றியுள்ள திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் அந்த நிறுவனங்களின் பதவியணி அலுவலர்கள் உள்ளடங்கலாக தொழில்,தொழில் உறவுகள் அமைச்சு மேலதிகச் செயலாளர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அபிவிருத்திக்கு மதிப்பிட முடியாத சேவையை ஆற்றியுள்ள தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அனைத்து பதவியினர் உள்ளடங்கலாக பணிப்பாளர் அதிபதிக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டபிள்யு.ஜே.எல்.யு.விஜயவீர
**தொழில், தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளர்,**
**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத் தவிசாளர்**

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகப் பணிப்பாளர் அதிபதியின் செய்தி**



இந்த அமைச்சினாலும், இதன் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களினாலும் 2012 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற முன்னேற்றம் தொடர்பில் 2013 ஆம் ஆண்டு தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தொழில் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக வருகின்ற மற்றும் தொழிலினால் விபத்துக்கள், நோய்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களைக் காட்டுகின்ற அதேவேளையில் ஆரோக்கியமான ஊழியர் படையொன்றை உருவாக்குவதற்காக ஆய்வாண்டு காலப்பகுதியில் எமது நிறுவகத்தினால் நாடளாவியரீதியில் உழைக்கும் மக்களுக்கும், தொழில்தருநர்களுக்குமாக வழங்கப்பட்டுள்ள சேவை அளப்பரியது.

இதன்படி, எமது குறிக்கோள்களுள் முதன்மையானதும், முக்கியமானதும், வேலைச் சூழலில் ஆபத்துக்களை இனங்காண்பதுடன், வேலைச் சூழலில் பல்வேறு பாதுகாப்பின்மையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதும், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஆரோக்கியமான ஊழியர் படையொன்றினை உருவாக்குவதனை நோக்கி அவற்றிற்கான உரிய அளவீடுகளை எடுப்பதுமாகும்.

மேலும், வேலைக் களங்களில் பல்வேறு பாதுகாப்பின்மைகள் காரணமாக தொழில்சார் நோய்களை இனங்காண்பதற்கும், தடுப்பதற்கும் தயக்கமின்றி செயற்படுகின்றது.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு பயிற்சிப் பாடநெறிகள், அர்த்தமுள்ள விரிவுரைகளை நடத்துதல் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களுக்குப் பயிற்சியளிப்பதனூடாக வேலைக் களங்களில் தொழில்சார் நோய்கள் மற்றும் விபத்துக்களைக் குறைப்பதன் மூலம் உயர் உற்பத்தித்திறனை நாட்டிற்கு வழங்குவதில் ஈடுபாட்டுடன் செயற்படுகின்றது.

மேலும் எமது நிறுவகத்தின் முன்னேற்றத்திற்காக தயக்கமேதுமின்றி பங்களிப்பினை நல்கியிருந்த அமைச்சினதும், திணைக்களத்தினதும் அனைத்து பதவியணியினருக்கும் மற்றும் எனது பதவியணியினர் உள்ளடங்கலாக நிறுவனகங்களின் அனைத்து தலைவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை ஆற்றுவதற்குத் தேவையான தலைமைத்துவம், வழிகாட்டல், தலைமையை வழங்கியமைக்காக தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களுக்கும், தொழில், தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளரும், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தவசாளருமாகிய திரு.டபிள்யு.ஜே.யு.எல்.ஜயவீர அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டாக்டர்.என்.சி.அமரசிங்க
**பணிப்பாளர் அதிபதி**
**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்**

## 2012 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற இலக்குகளும், முன்னேற்றங்களும்

**இலக்குகள்**

- பாதுகாப்பு அலுவலர்களின் பயிற்சி
    - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான தேசிய டிப்புளோமா பாடநெறியொன்றினை நடத்துதல்.
    - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான சான்றிதழ் பாடநெறிகள் இரண்டினை (02) நடத்துதல்.
    - தோட்டத்துறைக்காக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான உயர் பாடநெறியினை நடத்துதல்.
- கள ஆய்வுகளினூடாக 90 நிறுவனங்களுக்கு சுற்றாடல்சார் அளவீட்டு சேவைகளை வழங்குதல்.
- தொழில்சார் சுகாதாரம் தொடர்பில் பௌதீகம்சார் அளவீடுகளை வழங்குதல் (நிறுவனங்களுக்கான மருத்துவ ஆராய்ச்சிகளை வழங்குதல்).
- பல்வேறு நிறுவனங்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான அறிவினை வழங்குதல்.

## முன்னேற்றம்

### ❖ தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திலட தேசிய டிப்புளோமா பாடநெறி

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா பாடநெறி, 2012 பெப்ரவரி மாதத்தில் நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறியின் காலப்பகுதி 10 மாதங்கள் என்பதுடன், இந்தப் பாடநெறியைப் பின்பற்றுவதற்கு எமது நிறுவகத்தில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான சான்றிதழ் பாடநெறியினை பின்பற்றியிருப்பது அல்லது அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பினைக் கொண்டிருப்பது அல்லது இந்தத் துறையில் 05 வருட அனுபவத்தைக் கொண்டிருப்பது கட்டாயமாகும். பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 24 நிறைவேற்று அலுவலர்கள் பதிவுசெய்துள்ளதுடன், அவர்கள் இந்த பாடநெறியினை 2012 ஆம் ஆண்டில் பின்பற்றியிருந்தனர். இந்த பயிற்சியினூடாக தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களாக பல்வேறு துறைகளுக்கு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.





### ❖ தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் பாடநெறிகள்

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் பாடநெறிகள் 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு பாடநெறியினது காலப்பகுதி 15 வாரங்களாகும். இந்தப் பாடநெறிகள் 23 மாணவர்களினால் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், இது, இந்த பயிற்றப்பட்ட அலுவலர்களின் வேலைத் தலங்களில் தொழில்சார் விபத்துக்களைக் குறைப்பதற்கு உதவியுள்ளது. அவர்களில் பலர் தற்போது பாதுகாப்பு அலுவலர்களாக சேவையாற்றுகின்றனர். தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் ஆர்வமுள்ள எந்த நபரும் இந்த பாடநெறியினைப் பின்பற்ற முடியும்.





❖ **பெருந்தோட்டத் துறைக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் பாடநெறி**

பெருந்தோட்டத் துறையிலிருக்கின்ற 24 நிறைவேற்று அலுவலர்கள் பதிவு செய்திருந்ததுடன், அவர்கள் 15 நாள் பயிற்சி காலப்பகுதியில் இந்தப் பாட நெறியினை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருந்தனர். இந்தப் பாடநெறி கோட்பாடுசார் பயிற்சி, அதேபோன்று செய்முறை பயிற்சி உள்ளடங்கலாக ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. இந்தப் பாடநெறி, இந்நாட்டில் பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற ஆட்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதற்கு இந்த பாடநெறி இயலச்செய்துள்ளதுடன், பயிற்சியின் பின்னர், தொழிற்சாலைகள் தொழில்சார் பாதுகாப்பினூடாக பயனுறுதிவாய்ந்த வகையில் பயன்படுத்தியுள்ளமை பின்தொடர் நடவடிக்கையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.






அதேபோன்று, இந்த பாடநெறியைப் பின்பற்றுவதன் மூலம் இத்துறையில் மேம்பாடுகளையும், பெருந்தோட்டத்துறையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் வேலைச் சூழலின் உரிய ஒழுங்குமுறையையும் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொழில்சார் பாதுகாப்பு அலுவலர் பதவியின் அறிமுகம் காரணமாக, இது இத்துறையில் உயர் மதிப்பினைப் பெற்றுள்ளது. இதனூடாகப் பெறப்பட்டுள்ள பிறிதொரு முன்னேற்றம், தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்கள் இருவரிலும் அதிக உற்பத்தித்திறனை விருத்தி செய்வது சாத்தியமாகியுள்ளது. இந்தப் பாடநெறியினை பின்பற்றியுள்ள ஆட்களுக்கான வாழ்க்கைத்தொழில் வழிகாட்டி தொடர்பிலான கையேட்டினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


❖ **வேலைக் களங்களை ஆய்வுசெய்வதன் மூலம் சூழல்சார் அளவீட்டு சேவைகளை வழங்குதல்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, நாளாந்த செயற்பாடாக 90 பல்வேறு வாழ்க்கைத்தொழில் துறை நிறுவகங்களுக்கான சூழல் அளவீடுகளுக்கான சேவைகளை வழங்கியுள்ளது. தொழிற்சாலைகளில் சத்தம், வெளிச்சம், வெப்பம் மற்றும் இரசாயனங்களின் அளவினை அளவிடுதல் என்பவை இந்த அளவீடுகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான பரிந்துரைகள் வழங்கப் பட்டுள்ளதுடன், சூழல் மீதான தாக்கங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சான்றிதழ் உரிய நியமங்களுக்கமைவாக பயனுள்ளதாக இருந்தமையால் இதனூடாக சர்வதேச கட்டளைகளைப் பெறுவதற்கு இயலச் செய்திருந்தது.



❖ **உயர்தொழில்சார் சுகாதாரம் தொடர்பான பௌதீக அளவீடுகளை வழங்குதல் (நிறுவகங்களுக்கான மருத்துவ பரிசோதனைகளை வழங்குதல்)**

கேட்கும் ஆற்றலைப் பரிசோதித்தல், சுவாசத் தொழிற்பாடு மற்றும் இரத்தப் பரிசோதனை அதேபோன்று கண் பரிசோதனை போன்றவை பல்வேறு நிறுவகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் களின் உடல் தகுதியை விஞ்ஞானரீதியில் தீர்மானிப்பதற்காக செய்யப்பட்டுள்ளன. இவற்றினூடாக பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


- **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனங்களுக்கான அறிவினை வழங்குதல்**

நிறுவனங்களுக்குள் நடத்தப்படுகின்ற ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் 10 நிறுவனங்களின் தேவைப்பாடுகளுக்கமைவாகத் தயாரிக்கப்பட்டு வேலைத் தலங்களில் நடத்தப்பட்டிருந்தன.





தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால், விரிவுரைகள், தேவையான தகவல்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் சேவைகள் கொழும்பு மருத்துவ பீட, களனி, பேராதேனிய போன்ற பல்கலைக்கழகங்களின், பட்டப் பிற்படிப்பு பட்டங்கள் மற்றும் பல்வேறு பொது நிறுவகங்களின் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

## 2012 ஆம் ஆண்டில் விசேட செயற்பாடுகள்

❖ **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் மக்களிடையேயும், வாழ்க்கைத்தொழில் பயிலுநர்களிடையே விழிப்புணர்வினை உருவாக்குதல் மற்றும் சுகாதார கிளினிக்குகளை நடத்துதல் - 01**

மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையினதும், சர்வதேச தொழில் தாபனத்தினதும் பங்கேற்புடன், மேல் மாகாணத்தின் ஏழு (07) பிராந்தியங்களில் கழிவுப் பொருட்களைக் கையாள்வதில் ஈடுபடுகின்ற நபர் களுக்காக கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பிலான ஏழு (07) பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளது.

கழிவுப் பொருள் சேகரிப்போர் மற்றும் பொது சுகாதார அலுவலர்கள் உள்ளடங்கலாக முன்னூறு பணியாளர்கள் வெற்றிகரமாக பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். மேலும், இது, கழிவுப் பொருட்களை கையாள்வதில் ஈடுபடுகின்ற ஈடுபடுகின்ற ஆட்களின் சுகாதாரம் தொடர்பான ஒத்துழைப்பினையும், அறிவினையும் விருத்தி செய்வதற்காகவும், மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காகவும்,வெற்றிகரமான பாரிய சேவையை வழங்கியுள்ளதுடன், பணியாளர்களினதும், பொது மக்களினதும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு ஆதரவும் வழங்கியுள்ளது.






இந்த பயிற்சிப் பட்டறைகளுக்கு சமாந்தரமாக கழிவுப்பொருள் முகாமைத்துவ உயர் தொழில் வல்லுநர்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக சுகாதார கிளினிக்குகள் இலவசமாக நடத்தப்பட்டிருந்ததுடன், இந்தப் பணியாளர்களுக்கு இரத்தப் பரிசோதனை, கேட்டல் பரிசோதனை மற்றும் கண் பரிசோதனைக்கான வாய்ப்பும் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், மூக்குக் கண்ணாடிகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டிருந்தன.

❖ **பொது மக்கள் மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்றுவிப்பாளர்களிடையே தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்**

கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின் பிறிதொரு நடவடிக்கையாக 2012 மே மாதத்திலிருந்து தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகள் 18 இல் சேவையாற்றுகின்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் 4000 பேருக்கிடையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவர்களின் சுகாதார நிலைமையிலும் வாழ்க்கை முறையிலும் இதனூடாக முக்கிய மாற்றமொன்றை உருவாக்குவது சாத்தியமாகியிருந்தது. ஆகவே, தற்போது முக்கிய பிரச்சனையாக கருதப்படுகின்ற கழிவுப்பொருள் முகாமைத் துவத்தினூடாக பணத்தை உழைப்பது தொடர்பிலும், இவற்றைப் பயன்படுத்தி அலங்காரப் பொருட்களை செய்வதனூடாக மேலதிகமாக வருமானத்தை உழைக்கும் முறைகள் தொடர்பிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது.







- **இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்து வதற்காக முத்தரப்பு விநியோக பயிற்சிப்பட்டறையை நடத்துதல்**

நிருமாணத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை விருத்தி செய்வதற்காக ICTAT உடன் இணைந்து முத்தரப்பு விநியோக பயிற்சிப் பட்டறையை நடத்துதல்.




- **சர்வதேச தொழில் தாபனத்தால் நிதியிடப்பட்ட ‘‘கிறீன் ஜோப்ஸ்’’ என்பது பற்றிய அறிவினை பரிமாற்றிக்கொள்வதற்காக பயிற்சிப்பட்டறையொன்றை நடத்துதல்**

கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப்பட்டறைகளிலிருந்து பெறப்பட்ட அறிவினைப் பரிமாறுகின்ற நிகழ்ச்சித்திட்டமானது, சர்வதேச தொழில் தாபனத்தின் ‘‘கிறீன் ஜோப்’’ கருத்திட்டத்தின் பிறிதொரு கட்டமாக சர்வதேச தொழில் தாபனத்தின் நிதி அனுசரணையின் கீழ் கொள்ளுப்பிட்டி, ரேணுகா ஹோட்டலில் நடத்தப்பட்டது. மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகளிலிருக்கின்ற அலுவலர்கள் மற்றும் அரச நிறுவககங்களின் நிறைவேற்று அலுவலர்கள் இந்த பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியிருந்தனர்.






❖ **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் வாழ்க்கைத்தொழில் பயிற்சி உசாவலர்களுக்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் 02 மூன்று நாள் பயிற்சிப்பட்டறையை நடத்துதல்**

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான 02 மூன்று நாள் பயிற்சிப்பட்டறைகள் தமிழ், சிங்கள மொழி மூலம், உலக பல்கலைக்கழக மன்றத்தின் நிதிப் பங்களிப்புடன் வாழ்க்கைத்தொழில் பயிற்சி உசாவலர் களுக்காக 2012 செப்ரெம்பர் 18, 19, 20, 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் வெற்றிகரமாக நடத்தப்பட்டிருந்ததுடன், இதில் சிங்கள மொழியில் 20 வாழ்க்கைத்தொழில் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் தமிழ் மொழியில் 20 வாழ்க்கைத்தொழில் பயிற்றுவிப்பாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.







இந்த பயிற்சிப் பட்டறைகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித் துவப்படுத்தி பயிற்றுவிப்பாளர்கள் பங்குபற்றியிருந்ததன் விளைவாக வாழ்க்கைத் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி தெளிவான அறிவினையும், புரிந்துணர்வினையும் பெறுவது சாத்தியமாகியிருந்ததுடன், இது, நாட்டின் தேசிய ஐக்கியத்தில் விருத்தியை ஏற்படுத்தியிருந்தது. பயிற்சியினூடாக பெற்ற அறிவினை அவர்கள் பகிர்வதனால், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் எதிர்காலம் தொடர்பில் பயிலுநர்களாக ஆட்களை தொழிலில் இணையச் செய்கின்றது.

❖ **"தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தினூடாக பசுமையான உலகத்தை நோக்கி" என்ற கருப்பொருளின் கீழ் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தினை நடத்தியமை**

- **தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்திற்காக 2012 ஒக்டோபர் 05 ஆம் திகதி ஊடக மாநாடொன்றை நடத்தியமை**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சுகாதார வாரத்திற்காக தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் உழைக்கும் மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக ஊடக மாநடொன்று நடத்தப்பட்டிருந்தது. தொழில், தொழில் உறவுகள் அமைச்சுச் செயலாளர் திரு.டபிள்யு.ஜே.எல்.யு.விஜயவீர, தொழில் திணைக்கள ஆணையாளர் அதிபதி திருமதி பேள் வீரசிங்க, தொழிற் றுறைப் பாதுகாப்புப் பிரிவின் தலைவர் திருமதி சுஜாதா விஜயசுந்தர, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி டாக்டர்.என்.சி.அமரசிங்க ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கு பற்றியிருந்தனர். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி அவர்கள், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால், தொழில் திணைக்களத்தினால் மற்றும் தொழில், தொழில் உறவுகள் அமைச்சினால் தொழில்சார் ஊறுகளைக் குறைப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு வாரத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி விபரித்திருந்தார்.

இதற்கு மேலதிகமாக, இந்த வார காலத்தில் கட்புல இலத்திரனியல் ஊடகத்தினூடாகவும், அதேபோன்று பத்திரிகை அறிக்கைகள் மூலமும் நேரடி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனம், ஐ.ரி.என், சிரச மற்றும் சுவர்ணவாஹினி தொலைக்காட்சி அதேபோன்று லேக் கவுஸ் மற்றும் விஜயா பத்திரிகை போன்ற அத்தகைய இலத்திரனியல், அச்சு ஊடகங்களின் முழுமையான அனுசரணையினூடாக உதவி வழங்கப்பட்டிருந்தது.






- **‘வின்லேஸ்’ வேலைக் களங்களில் சுகாதார நிலைமை தொடர்பில் பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறையை நடத்தியமை**

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக அலுவலர்களின் பங்கேற்புடன் ‘வின்லேஸ்’ வேலைக் களத்தில் 2012 ஒக்டோபர் 06 ஆம் திகதி மு.ப 8.00 மணி முதல் பி.ப 1.30 வரை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்திற்காக நடத்தப்பட்டது.





- **ICTAD இன் ஒருங்கிசைவுடன் நிருமாணத் துறையின் பணியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறையை நடத்தியமை**

நிருமாணத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்கள் தொடர்பில் வேலையாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று, தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையின் கீழ் ICTAD உடன் இணைந்து தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் கேட்போர்கூடத்தில் 2012 ஒக்டோபர் 08 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான கருப்பொருள் நிருமாணத் துறையில் ‘‘தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் முழுமையாக இல்லை‘‘ என்பதாகும். நிருமாணத் துறையில் தொழில்சார் விபத்துக்களுக்கு முகம் கொடுக்கின்ற வேலையாளர்களுக்கு கண்ணில் ஏற்படுகின்ற காயங்களைத் தடுத்தல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கண் கிளினிக் போன்றவை நடத்தப்பட்டிருந்தன. நிருமாணத் துறையில் விபத்துக்களைச் சந்ததித்திருந்த வேலையாளர்களுக்கு வெகுமதிகள் வழங்கப் பட்டிருந்ததுடன், அவர்களது பிள்ளைகளுக்கு சிரம வாசனா நிதியத்தின் தலைமையின் கீழ் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சித்திட்டம் தேசிய தொழில்சார் சுகாதாம் மற்றும் பாதுகாப்பு நிறுவகம், ICTAD இன் ஒருங்கிசைவுடன் நடத்தியிருந்தது.




- **தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தின் பிரதான மாநாடு**



தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் தொழில்தருநர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தின் பிரதான நிகழ்ச்சித்திட்டமாகக் கருதப்படுகின்ற மாநாடு, கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொகுகே தலைமையில் கொழும்பு கலதாரி ஹொட்டலில் 2012 ஒக்டோபர் 10 ஆம் திகதி மு.ப 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை நடத்தப்பட்டிருந்தது. தொழில்சார் பாதுகாப்பு தொடர்பில் பல அர்த்தமுள்ள, பயனுறுதிவாய்ந்த விரிவுரைகளை உள்ளடக்குகின்ற இந்த மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை நிறுவகங்களின் நிறைவேற்று அலுவலர்கள், மனித வளங்கள் முகாமையாளர்கள் மற்றும் பல அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர். திரு.விநாய பதக் மற்றும் திரு. டயஸ் கொமஸ் ஆகியோர் வளஆளர்களாக இம்மாநாட்டில் பங்கு பற்றியிருந்தனர்.

அதே தினத்தில், 2012 ஆம் ஆண்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் நுகாதாரம் மீது சான்றிதழ் பாடநெறிகளை பூர்த்திசெய்திருந்த 13 மாணவர்களுக்கு கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொகுகே தலைமையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. பிறண்டிக்ஸ் தனியார் லிமிடெட் இந்த வைபவத்திற்கு அனுவரணை வழங்கியிருந்தது. இந்த நிகழ்வின் செயற்பாடுகளை ஆற்றுவதில் 3எம் தனியார் லிமிடெட் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இணைந்து அனுசரணை வழங்கியிருந்த துடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்துடன் கைகோர்த்திருந்தது.












- **பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தை நடத்தியமை**

பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டுள்ள மேற்பார்வையாளர்கள், முகாமை யாளர்கள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களுக்கும், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான உயர் பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளவர்களுக்கும் சான்றிதழ் வழங்கும் வைபவம் கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொகுகே தலைமையில் கோல் பேஸ் ஹொட்டலில் 2012 ஒக்டோபர் 12 ஆம் திகதி நடைபெற்றிருந்தது. கனடா உலக பல்கலைக்கழக அவை மற்றும் ‘எத்திக்கல் ரீ பாட்ணசிப்’ போன்ற நிறுவகங் களின் பெருந்தோட்டச் சமூக கருத்திட்டங்கள் இரண்டின் இணைந்த நிதிப் பங்களிப்பின் கீழ் பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதன் பிரதான குறிக்கோளுடன் இந்தப் பாட நெறியில் ஐந்து தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான 20 தோட்டங்களின் தெரிவுசெய்யப்பட்ட இருபது அலுவலர்கள் பங்குபற்றியிருந்ததுடன், 15 நாள் பாடநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்தனர். இதற்கு மேலதிகமாக, இந்த பாடநெறியின் கீழ் பெருந்தோட்டத் துறைக்காக தொழில்சார் சுகாதாரம் தொடர்பான ஆலோசனைக் கையேடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.








❖ **கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவ கருத்திட்டம்**

இந்த கருத்திட்டத்தின் கீழ், கொழும்பு மாநகரசபை வடிகாலமைப்பு முறைமையில் தொழிலாற்றுகின்ற மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்களிடையே தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக 05 நாள் பயிற்சிப்பட்டறை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் 2012 டிசெம்பர் 05, 11, 14, 17 மற்றும் 20 ஆம் திகதிகளில் நடைபெற்றிருந்ததுடன், இந்நிகழ்வில் 15 அலுவலர்கள் பங்குபற்றியிருந்தனர்.





இந்த கருத்திட்டத்தின் கீழ்,கொழும்பு மாநகரசபை வடிகாலமைப்பு முறைமையில் தொழிலாற்றுகின்ற பணியாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சிப் பட்டறை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் 2012 டிசெம்பர் 10 ஆம் திகதி நடைபெற்றிருந்ததுடன், இந்நிகழ்வில் கொழும்பு மாநகரசபை வடிகாலமைப்பு முறைமையில் தொழிலாற்றுகின்ற 23 பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்தப் பயிற்சிப்பட்டறையில் தன்னாள் பாதுகாப்பு உபகரணத்தைப் பயன்படுத்துவது, அவற்றின் முக்கியத்துவம், தொழில்சார் நோய்கள் மற்றும் விபத்தொன்று ஏற்படுகையில் நடந்துகொள்ளும் முறை தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதனூடாக, பணியாளர்கள், தனிப்பட்ட வாழ்க்கைக்காக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான அறிவு பற்றிய முக்கியத்துவத்தைப் பரந்தளவில் பெற்றுக்கொள்ள முடிந்திருந்தது.





**தேசிய நியம அபிவிருத்தி**

ISO 230585 மற்றும் ISO 130225 நியமங்களைத் தாபிப்பதற்கு இலங்கை தரநிர்ணய நிறுவகத்துடன், IDRC கருத்திட்டத்திட்டத்தின் கீழ் இலங்கை நனோ தொழில்நுட்பம் தொடர்பான செயற்பாடுகளுக்கான ஒழுங்கமைப்பு கட்டமைப்பொன்றினை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

SLAB நிறுவகத்தின் உதவியுடன் சிறந்த ஆய்வுகூட செய்முறைகளுக்கான வழிகாட்டல் செம்மைப்படுத்தப்படுகின்றது.

- **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்விற்கான நூலகம்**

தொழில்சார் பாதுகாப்பு தொடர்பான பயனுள்ள புத்தகங்களை அதிகளவு எண்ணிக்கையில் கொண்டிருக்கின்ற நூலகம் என்பதுடன், இது, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வளாகத்தில் நிலத்தளத்தில் அமைந்திருக்கின்றது. மேலும், பின்வருகின்ற பாடங்களுடன் தொடர்புபட்டுள்ள புத்தகங்கள், பருவ வெளியீடுகள், கையேடுகள், அறிக்கைகள், அலகுகள், மீள அச்சடிக்கப்பட்ட பயிற்சி அலகுகள், இரசாயனப் பாதுகாப்பு தரவு பதிப்புக் குறிப்புக்கள் மற்றும் தரவினை அடிப்படையாகக்கொண்ட செய்தித் தலைப்புக்களை மாணவர்கள் உசாவுவதற்கும், கற்பதற்குமாக இது வார நாட்களில் திறக்கப்படுகின்றது.

தொழில்சார் சுகாதாரம்

தொழிற்றுறை சுகாதாரம்

சுற்றாடல் சுகாதாரம்

பொது மக்களின் சுகாதாரம்

தொழில்புரியும் சூழல்

தொழிற்றுறைப் பாதுகாப்பு

இரசாயனப் பாதுகாப்பு

தொழில்சார் நோய்கள்

தொழிற்றுறைச் சட்டங்களை வகுத்தமைத்தல்

விஷம் பற்றிய விஞ்ஞானம்


நீர் மற்றும் சுத்திகரிப்பு

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர்கள் சபை

| | பெயர் | பதவி | அலுவலக முகவரி |
|---|---|---|---|
| 01. | திரு.டபிள்யு.ஜே.எல்.யூ.விஜய வீர | செயலாளர் | தொழில், தொழில் உறவுகள் அமைச்சு |
| 02. | திருமதி.பீ.வீரசிங்க | தொழில் ஆணையாளர் அதிபதி | தொழிற் செயலகம், தொழில் திணைக்களம் |
| 03. | திரு.ரவி.பீரிஸ் | பணிப்பாளர் அதிபதி | தொழில்தருநர் சமாஜம் |
| 04. | திரு.டபிள்யு.ஏ.பியதஸ | தவிசாளர் | அரச பணியாளர்கள் சுதந்திர வர்த்தக சங்கம் |
| 05. | திரு.லெஸ்லி தேவேந்திரா | தவிசாளர் | 'ஸ்ரீலங்கா நிதஹஸ் வெலட் சங்கமய' |
| 06. | டாக்டர். நர்மி விக்கிரமசிங்க | தொழில்சார் நோய்கள் மீதான நிபுணத்துவ வைத்தியர் | ஆசிரி வைத்தியசாலை, கிருல வீதி, நாரஹென்பிட்டி. |
| 07. | பேராசிரியர் சுபாங்கி ஹேரத் | சமூகவியல் பீடத்தின் பீடாதிபதி | சமூக விஞ்ஞானங்கள் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 08. | திரு.எச்.கே.பாலசந்திர | பிரதிப் பணிப்பாளர் | நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவகம் |
| 09. | திரு.டபிள்யு.எல்.எஸ்.விஜேசு ந்தர | தொழில் ஆணையாளர் | கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு, தொழில் திணைக்களம் |
| 10. | திருமதி.சி.சேனநாயக | பிரதிப் பணிப்பாளர் | தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| 11. | டாக்டர்.ஏ.ஜயலத் | பிரதிப் பணிப்பாளர் அதிபதி | சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து அமைச்சு, சமூக சுகாதார சேவைகள் பிரிவு |
| 12. | திரு.எஸ்.ஏ.எஸ்.றுச்சிரா விதாரண | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | கைத்தொழில் பிரிவு, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு |
| 13. | டாக்டர்.டி.பி.ரி.விஜேரத்ன | கமத்தொழில் திணைக்களப் பணிப்பாளர் | கமத்தொழில் அமைச்சு மற்றும் கமத்தொழில் திணைக்களம் |
| 14. | டாக்டர்.என்.சி.அமரசிங்க | பணிப்பாளர் அதிபதி | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் |

# நிதிப் பகுப்பாய்வு 2011-2012

| | 2011 | 2012 |
|---|---|---|
| தொழில்சார் பாதுகாப்பு, சுகாதார பாடநெறியினூடாகப் பெறப்பட்ட வருமானம் | 1,194,127.00 | 1,881,785.93 |
| சுற்றாடல் அளவீட்டிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 1,661,500.00 | 2,418,363.00 |
| ஏனைய தாபனங்களுடன் செய்யப்பட்ட கூட்டு உடன்படிக்கைகளினூடாக வழங்கப்பட்ட சேவையிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 262,280.72 | 2,765,096.66 |
| நனோ தொழில்நுட்பத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் | 325,000.00 | 490,000.00 |
| மருத்துவ பரிசோதனையிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 269,100.00 | 350,176.00 |
| கட்டட வாடகையிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 474,750.00 | 296,597.59 |
| தொழில்சார் பாதுகாப்பு, சுகாதார தினத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் | 490,610.40 | 252,819.83 |
| வட்டியிலிருந்தான வருமானம் (தே.தொ.பா.சு.நி அபிவிருத்தி நிதியம்) | | 719,390.41 |
| ஏனைய வருமானம் | 19,607.00 | 35,658.00 |
| மொத்தம் | 4,696,975.12 | 9,209,887.42 |



**நிதிக் கூற்று**

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்**

**2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஐந்தொகை**

| | | |
|---|---|---|
| **<u>நிலையான சொத்துக்கள்</u>** | | **ரூபா** |
| நிலையான சொத்துக்கள் | | 11,925,028.67 |
| திரட்டிய பெறுமானத் தேய்வு | | <u>3,424,811.35</u> |
| | 8,500,217.32 | |
| தலைமை அலுவலகத்திலிருந்து மூலதனச் செலவீனம் | | 1,171,423.33 |
| **<u>நடைமுறைச் சொத்துக்கள்</u>** | | |
| தே.தெ.பா.சு நி அபிவிருத்தி நிதியம் | | 10,000,000.00 |
| பண்டிகை முற்பணம் | | 4,000.00 |
| பெறுகைகள் | | 719,390.91 |
| பண வைப்புகள் - மக்கள் வங்கி | | 3,472,695.31 |
| சில்லறைப் பணம் | | <u>10,000.00</u> |
| சொத்துக்களின் நிகரப் பெறுமதி | | <u>23,877,726.87</u> |
| ஆரம்ப ஒதுக்கம் | | 8,414,095.92 |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | | (639,048.00) |
| நிலைத்திருக்கும் தேறிய சொத்துக்களின் பெறுமதி | | 3,163,919.80 |
| ஆண்டில் உழைத்த தேறிய வருமானம் (31.12.2012) | | <u>11,001,879.70</u> |
| மொத்த ஒதுக்கம் | | <u>21,940,847.42</u> |
| **<u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>** | | |
| தருமதிகள் மற்றும் உறப்பட்ட செலவுகள் | | 1,894,981.15 |
| செலுத்த வேண்டிய ஊ.சே.நி | | 19,4042.00 |
| செலுத்த வேண்டிய ஊ.ந.நி | | 2,856.30 |
| அடுத்த ஆண்டில் பெறக்கூடியவை | | <u>20,000.00</u> |
| | | 1,936,879.45 |
| மொத்தம் | | <u>23,877,726.87</u> |

அனுமதிக்கப்பட்டது | | தயாரிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| டபிள்யு.ஜே.எல்.யூ.விஜயவீர | டாக்டர்.என்.சி.அமரசிங்க | பீ.எம்.கே.பெரேரா |
| தவிசாளர் | பணிப்பாளர் அதிபதி | உதவிப் பணிப்பாளர் (நிதி) |
| தேசிய தொழிற்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | தேசிய தொழிற்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம | தேசிய தொழிற்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் |

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்**

**2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று**

| | |
|---|---|
| திறைசேரியிலிருந்து பெறப்பட்டவை | |
| 127-2-3-32201 | 5,148,455.21 |
| 127-2-3-31503 | 2,200,168.16 |
| தொழில்சார் பாதுகாப்புப் பாடநெறிகளிலிருந்து பெறப்பட்ட வருமானங்கள் | |
| சான்றிதழ் பாடநெறி | 731,485.83 |
| டிப்புளோமா பாடநெறி | 992,600.10 |
| தாதிப் பாடநெறி | - |
| தொழிற்றுறைப் பயிற்சிப் பாடநெறி | 157,700.00 |
| சுற்றாடல் அளவீட்டிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 2,418,363.00 |
| ஏனைய செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 2,765,096.66 |
| கருத்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 490,000.00 |
| மருத்துவ பரிசோதனையிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 350,176.00 |
| விரிவுரை மண்டபத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் | 296,597.59 |
| வட்டியிலிருந்தான வருமானம் | 719,390.41 |
| தேசிய தொழில்சார் சுகாதார வாரத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் | 252,819.83 |
| ஏனையவை | 35,658.00 |
| | 16,558,510.79 |
| நிறுவனம்சார் தாபன நிருவாகச் செலவினம் | 2,199,170.59 |
| அலுவலகச் செலவினம் | 3,028,581.41 |
| போக்குவரத்து,வாகனச் செலவினம் | 239,628.99 |
| நிதிச் செலவினம் | - |
| ஏனைய செலவீனம் | 89,250.10 |
| | 5,556,631.09 |
| **மிகை வருமானம்** | 11,001,879.70 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

**1.1** உரிமைப் பங்கினை அறிக்கையிடுதல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், இலங்கை தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சின் கீழ் 2005 ஏப்பிரல் 28 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்தது. தே.தொ.பா.சு.நி, விழிப்புணர்வினை அதிகரிப்பதனூடாகவும், சரியான சுகாதார, பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கைக்கொள்வதனூடாக அனைத்து மக்களுக்கும் சிறந்த வேலை நிலைமைகளுக்காக ஈடுபாட்டுடன் தொழிற்படுகின்றது. இந்த நிறுவகம், கொழும்பு - 05, ஜாவத்தை வீதி, இல.97 இல் அமைந்திருக்கின்றது.

**1.2** முக்கிய செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

தே.தொ.பா.சு.நி, விழிப்புணர்வினை அதிகரிப்பதனூடாக, பொருத்தமான சுகாதார, பாதுகாப்பு சட்டவாக்கத்தைப் பின்பற்றுவதனூடாக அனைத்து மக்களுக்கும் சிறந்த வேலை நிலைமைகளுக்காக ஈடுபாட்டுடன் செயற்படுகின்றது. இச் செயற்பாடுகள், நாளது வரைப்படுத்தப்பட்ட தகவல், ஆலோசனை மற்றும் உசாவுகை சேவைகளைப் பரப்புதலை உள்ளடக்குகின்றது. இவர்கள், தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அத்தகைய பயிற்சி அதேபோன்று தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் கணக்கெடுப்புக்கள் மற்றும் புலன்விசாரணை ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளிலிருந்து நன்மைகளைப் பெறுகின்ற அனைத்து வகையான மக்களுக்கும் கற்பிப்பதுடன், பயிற்சியுமளிக்கின்றனர்.

1.3. தயாரிப்பின் அடிப்படை

(அ) இணக்கப்பாட்டுக் கூற்று

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள், ஐந்தொகை, வருமானக் கூற்று, ஒப்புரவு மாற்றக் கூற்று, பண ஓட்டக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக் குறிப்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றது. இந்த கூற்றுக்கள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் தரப்பட்டுள்ள சிறிய தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) அளவீட்டின் அடிப்படை நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களில் பணவீக்கக் காரணிகளுக்கான சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தொழிற்பாட்டு, சமர்ப்பிப்பு நாணயம்

இந்த நிதிக் கூற்றுக்கள் கம்பனிகளின் தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

(2) **ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

(i) இனங்காணுதலும் அளவீடும்

பொருள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம், திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் திரட்டிய சேத இழப்புக்களைக் கழித்த செலவில் அளவிடப்படுகின்றது.

பொறித் தொகுதி, இயந்திரமொன்றின்றின் செலவு, அதன் கொள்வனவு விலை மற்றும் அதன் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்காக வேலை நிலைமைகளுக்கு ஆதனத்தைக் கொண்டு வரும்வரை நேரடியாக ஏற்படக்கூடிய செலவுகளைக் கொண்டிருக்கின்றது.

வேறாக கணக்கிடப்படுகின்ற ஆதனத்தின் பொருளொன்று, பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் பகுதியொன்றை மாற்றுவதற்கு உறப்படுகின்ற செலவு, பதிவழிப்புச் செய்யப்படுகின்ற பகுதிக்காக எடுத்துவரப்படுகின்ற தொகையுடன் மூலதனமாக ஆக்கப்பட்டுள்ளது. ஏனைய முதலீட்டுச் செலவு, பொருள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தில் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கின்ற போது மட்டுமே முதலீடாக்கப்படுகின்றது.

(ii) பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்வு, சொத்தின் மதிப்பிட்டுள்ள பயனுள்ள வாழக்கைக்காலத்தின் அடிப்படையில் நேர் ஒழுங்கினடிப்படை மீது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

நடைமுறை மற்றும் ஒப்பீட்டுக் காலப்பகுதிகளுக்காக மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள வாழ்க்கைக்காலம் பின்வருமாறு:

| | ஆண்டு |
|---|---|
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 10 |
| கணினி உபகரணம் | 05 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10 |
| ஒலி முறைமை பொருட்கள் | 05 |
| மருத்துவ உபகரணம் | 10 |
| ஏனைய சொத்துக்கள் | 10 |

(iii) நிலையான சொத்துக்கள்

இந்த நிறுவகம், தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்திடமிருந்து நிறுவகம் ஆரம்பிக்கப்படுகின்ற போது மாற்றப்பட்ட சில சொத்துக்களைக் கெண்டிருக்கின்றது. 2012 ஆம் ஆண்டில் சில சொத்துக்கள் ஐந்தொகையில் முன்னைய ஆண்டு சீராக்கலின் கீழ் முதலீடாக்கப்பட்டுள்ளதுடன், பெறுமானத் தேய்விடப்பட்டுள்ளது.

(iv) தேசிய ஆதாரமன்ற நிறுவகம், 2012.12.31 இலுள்ளவாறு கொள்வனவு செய்யப்படாமை காரணமாக ஐந்தொகையின் கீழே ஏற்கனவே பெறப்பட்ட உறப்பட்ட புதிய நனோ தொழில்நுட்ப மருத்துவ உபகரண கொள்வனவிற்காக 1,650,000 ரூபா நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல
My No
எல்எஸ்/சீ/என்ஐஓஎஸ் எச்/எப்ஏ/2012

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date
2013 ஒக்தோபர் 09

பணிப்பாளர் நாயகம்
தேசிய தொழில் பாதுகாப்பு சுகாதார நிறுவகம்

**தேசிய தொழில் பாதுகாப்பு சுகாதார நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய தொழில் பாதுகாப்பு சுகாதார நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில் பாதுகாப்பு சுகாதார நிறுவக அதிகாரச்சட்டத்தின் 17(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டிறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2013 யூலை 23 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய தொழில் பாதுகாப்பு சுகாதார நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 10(5) ஆம் பிரிவு | ஏதாவது வருடத்தில் தேறிய மிகை வருமானத்திலிருந்து எஞ்சிய பணம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும் நடப்பாண்டில் ரூபா 11,001,880 தொகையான தேறிய மிகை வருமானத்தில் எஞ்சியவை ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரினால் வழங்கப்படுகின்ற அங்கீகாரமின்றி நடப்பாண்டில் ரூபா 10 மில்லியன் தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

(ஆ) நிதிப்பிரமாணங்கள்

--------------------------------

| | |
|---|---|
| (i) நி.பி. 103 மற்றும் 104 | நிறுவகத்திற்குச் சொந்தமான ஒரு மடிக் கணனி 2012 ஏப்ரல் 23 திகதி தொடக்கம் காணாமற் போயிருந்ததுடன் இது தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் ஆரம்பப் பரிசோதனையோ அல்லது முழுமையான பரிசோதனையோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 756 | 2009 ஆம் ஆண்டிலிருந்து பொருட்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(இ) தாபனவிதிக் கோவை

--------------------------------

| | |
|---|---|
| IX அத்தியாயத்தின் 2.2 ஆம் பந்தி | நடப்பாண்டில் விரிவுரைகள் நடாத்தப்பட்டு அரசாங்க உத்தியோகத்தர்களான விரிவுரையாளர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 96,750 தொகையிலிருந்து 10 சதவீதம் அதாவது ரூபா 9,675 தொகை அரசாங்க பங்களிப்பாக ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய தொழில் பாதுகாப்பு சுகாதார நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 11,001,880 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 4,721,416 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் முன்னைய ஆண்டை விட ரூபா 6,280,464 முன்னேற்றத்தைக் காண்பித்தது. மீளாய்வாண்டில் வருமானங்களில் 112 சதவீத அதிகரிப்பு இதற்குக் காரணமாக இருந்தது. அரசாங்கத்தின் பங்களிப்பு 137 சதவீதத்தினாலும் பல்வேறு பாடநெறி வருமானங்கள் 96 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தமையே நிதிவிளைவுகளின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணங்களாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செலாற்றல் அறிக்கைகள் இன்மையால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல் தொடர்பாக மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது.

### 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

4.2.1 (அ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தனியார் நிறுவனங்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 267,500 வருமானத்திற்கான பணத்தினை பொறுப்பேற்றலிற்கான 08 பற்றுச்சீட்டுக்கள் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளின் பின்னர் 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) ரூபா 267,500 பெறுமதியான 08 காசோலைகள் மக்கள் வங்கி – நாரஹேன்பிட்ட கிளையில் வங்கி நடைமுறைக் கணக்கில் தேறாத காசோலைகளாக காட்டப்பட்டிருந்த போதிலும் இக் காசோலைகள் வேறோர் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையிலும் அவதானிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக 2013 ஆகஸ்ட் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓய்வுபெற்ற ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் ஒருவருக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் டீஎம்எஸ்/ஈ3/39/7/047/1 ஆம் இலக்க கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு செலுத்துவதற்கு அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மேற்படி கடிதத்தின் மூலம் ஆராய்ச்சி உதவியாளர்களுக்கன்றி விரிவுரையாளர்களிற்கு விரிவுரைக் கட்டணத்தினை செலுத்துவதற்கே அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் பிழையாகக் கருதப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 171,000 விரிவுரைக் கட்டணம் மேற்படி ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

இந்த உத்தியோகத்தருக்கு நாட்டின் எப்பிரதேசத்திற்குச் சென்றாலும் மணித்தியாலத்திற்கு ரூபா 500 படி ஆகக்கூடியது 03 மணித்தியாலத்திற்காக மாத்திரம் அனுபவமுள்ள பயிற்சியளிக்கும் உத்தியோகத்தருக்காக செலுத்தப்படுவதாக பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

---------------------------------

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகரித்துக் கொள்ளப்படாத ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியில் பெண் உத்தியோகத்தர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 24 ஆந் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் ஒரு மாதமும் 24 நாட்கள் தாமதத்தின் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் மூன்று வருடத்திற்குக் குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்ட தினம் தொடக்கம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஏற்படுத்தப்படாதிருந்ததுடன் வரிசை அமைச்சான தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் மூலமும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.5 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடப்பாண்டிற்கான கணக்காய்வுக் குழுவை ஆரம்பித்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.6 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) திட்டமிடல்
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) பதவியணியினர் நிர்வாகம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி